Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

# tirumantiram of tirumUlar - part IIIc (2649-3047)
# (in Tamil Script, unicode/UTF-8 format)

## திருமந்திரம் (திருமூலர்)
## ஒன்பதாம் தந்திரம் (2649-3047)

This webpage with Tamil Text is based on Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:

i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer
and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages

(Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.

In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

C - Project Madurai 2002
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
**http://www.projectmadurai.org/**
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

திருமந்திரம்
ஒன்பதாம் தந்திரம்

1. குருமட தரிசனம்

2649
பலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியும் ஈசன் தனக்கென்ற உள்கிக்
குவியும் குருமடம் கண்டவர்
தாம்போய்த்
தளிரும் மலரடி சார்ந்துநின் றாரே. 1

2650
இவன்இல்லம் அல்லது அவனுக்கு
அங்கு இல்லை
அவனுக்கும் வேறு இல்லம் உண்டா

அறியின்
அவனுக்கு இவனில்லம் என்றென்று
அறிந்தும்
அவனைப் புறம்புஎன்று அரற்றுகின்
றாரே. 2

2651
நாடும் பெருந்துறை நான்கண்டு
கொண்டபின்
கூடும் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட அரியன் சிறப்பிலி எம்இறை
ஓடும் உலகுயிர் ஆகிநின் றானே. 3

2652
இயம்புவன் ஆசனத் தோடு
மலையும்
இயம்புவன் சித்தக் குகையும்
இடமும்

இயம்புவன் ஆதாரத் தோடு வனமும்
இயம்புவன் ஈராறு இருநிலத்
தோர்க்கே. 4

2653
முகம்பீடம் மாமடம் முன்னிய
தேயம்
அகம்பர வர்க்கமே ஆசில்செய்
காட்சி
அகம்பர மாதனம் எண்எண் கிரியை
சிதம்பரம் தற்குகை ஆதாரம் தானே.
5

2654
அகமுக மாம்பீடம் ஆதார மாகும்
சகமுக மாம்சத்தி யாதன மாகும்
செகமுக மாம்தெய்வ மேசிவ மாகும்
அகமுகம் ஆய்ந்த அறிவுடை

யோர்க்கே. 6

2655
மாயை இரண்டும் மறைக்க
மறைவுறும்
காயம்ஓர் ஐந்தும் கழியத்தா னாகியே
தூய பரஞ்சுடர் தோன்றச்
சொரூபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்த ராமே.
7

## 2. ஞானகுரு தரிசனம்

2656
ஆறொடு முப்பதும் அங்கே
அடங்கிடில்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
வேறே சிவபதம் மேலாய்

அளித்திடும்
பேறாக ஆனந்தம் பேணும்
பெருகவே. 1

2657
துரியங்கள் மூன்றும் கடந்தொளிர்
சோதி
அரிய பரசிவம் யாவையும் ஆகி
விரிவு குவிவுஅற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசஒண் ணாதே. 2

2658
ஆயன நந்தி
அடிக்குஎன்தலைபெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்தஎன்
வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணஎன்
கண்பெற்றேன்

சேயன நந்திக்குளன் சிந்தைபெற்
றேனே. 3

2659

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயம்கெடு
மாபோல்
குருவின் உருவம் குறித்த அப்
போதே
திரிமலம் தீர்ந்து சிவன்அவன் ஆமே.
4

2660

அண்ணல் இருப்பிடம் ஆரும்
அறிகிலர்
அண்ணல் இருப்பிடம்
ஆய்ந்துகொள் வார்களுக்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே

அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன்இவன்
ஆமே. 5

2661
தோன்ற அறிதலும் தோன்றல்
தோன்றாமையும்
மான்ற அறிவு மறிநன வாதிகள்
மூன்றவை நீங்கும் துரியங்கள்
மூன்றற
ஊன்றிய நந்தி உயர்மோனத் தானே.
6

2662
சந்திர பூமிக் குள்தன்புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்தம் இலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரம்குரு பற்றே. 7

2663
மனம்புகுந் தான்உலகு ஏழும் மகிழ
நிலம்புகுந் தான்நெடு வானிலம்
தாங்கிச்
சினம்புகுந் தான்திசை எட்டும்நடுங்க
வனம்புகுந் தான்ஊர் வடக்கென்பது
ஆமே. 8

2664
தானான வண்ணமும் கோசமும்
சார்தரும்
தானாம் பறவை வனமெனத் தக்கன
தானான சோடச மார்க்கந்தான்
நின்றிடில்
தாமாம் தசாங்கமும் வேறுள்ள
தானே. 9

2665

மருவிப் பிரிவுஅறி யாஎங்கள் மாநந்தி
உருவம் நினைக்க நின்று உள்ளே உருக்கும்
கருவில் கரந்துஉள்ளம் காணவல் லார்க்குஇங்கு
அருவினை கண்சோரும் அழிவார் அகத்தே. 10

2666

தலைப்பட லாம்எங்கள் தத்துவன் தன்னைப்
பலப்படு பாசம் அறுத்துஅறுத் திட்டு
நிலைப்பெற நாடி நினைப்பற உள்கில்
தலைப்பட லாகும் தருமமும் தானே. 11

2667
நினைக்கின் நினைக்கும்
நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர்ச் சோதியி
னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய
ரேனும்
கனத்த மனத்தடைந் தால்உயர்ந்
தாரே. 12

2668
தலைப்படும் காலத்துத் தத்துவம்
தன்னை
விலக்குறின் மேவை விதியென்றும்
கொள்க
அனைத்துஉல காய் நின்ற ஆதிப்
பிரானை

நினைப்புறு வார்பத்தி தேடிக்
கொள்வாரே. 13

2669
நகழ்வுஒழிந் தார்அவர் நாதனை
யுள்கி
நிகழ்வுஒழிந் தார்எம் பிரானொடும்
கூடித்
திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தையின்
உள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின்
றானே. 14

2670
வந்த மரகத மாணிக்க ரேகைபோல்
சந்திடு மாமொழிச் சற்குரு
சன்மார்க்கம்
இந்த இரேகை இலாடத்தின் மூலத்தே

சுந்தரச் சோதியுள் சோதியும் ஆமே.
15

2671
உண்ணும் வாயும் உடலும்
உயிருமாய்க்
கண்ணுமா யோகக் கடவுள் இருப்பது
மண்ணு நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மின்றி வெளியானோர்
மேனியே. 16

2672
பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
பரசிவன் ஆணை நடக்கும் பாதியால்
பெரிய பதிசெய்து பின்னாம்
அடியார்க்கு
உரிய பதியும்பா ராக்கி நின்றானே.
17

2673
அம்பர நாதன் அகலிடம் நீள்பொழில்
தம்பர மல்லது தாமறியோம் என்பர்
உம்பருள் வானவர் தானவர்
கண்டிலர்
எம்பெரு மான்அருள் பெற்றிருந்
தாரே. 18

2674
கோவணங் கும்படி கோவண
மாகிப்பின்
நாவணங் கும்படி நந்தி
அருள்செய்தான்
தேவணங் கோம்இனிச் சித்தம்
தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந்
தோமே. 19

## 3. பிரணவ சமாதி

2675

தூலப் பிரணவம் சொரூபானந்தப்
பேருரை
பாலித்த சூக்கும மேலைச்
சொரூபப்பெண்
சூலித்த முத்திரை ஆங்கதிற்காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த
வீதியே. 1

2676

ஓம்எனும் ஓங்காரத் துள்ளே
ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே
பலபேதம்

ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி
சித்தியே. 2

2677
ஓங்காரத் துள்ளே உதித்தஐம்
பூதங்கள்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்கார தீதத்து உயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே. 3

2678
வருக்கம் சுகமாம் பிரமமும் ஆகும்
அருக்கம் சராசரம் ஆகும் உலகில்
தருக்கிய ஆதாரம் எல்லாம்தன்
மேனி
சுருக்கம்இல் ஞானம் தொகுத் துணர்ந்
தோரே. 4

2679
மலையும் மனோபவம் மருள்வன
ஆவன
நிலையில் தரிசனம் தீப நெறியாம்
தலமும் குலமும் தவம்சித்த மாகும்
நலமும்சன் மார்க்கத்து உபதேசம்
தானே. 5

2680
சோடச மார்க்கமும்
சொல்லும்சன்மார்க்கிகட்கு
ஆடிய ஈராறின் அந்தமும் ஈரேழிற்
கூடிய அந்தமும் கோதண்ட
மும்கடந்து
ஏறியே ஞானஞே யாந்தத்து
இருக்கவே. 6

## 4. ஒளி

2681

ஒளியை அறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடனிருந் தானே. 1

2682

புகல்எளி தாகும் புவனங்கள் எட்டும்
அகல்ஒளி தாய்இருள் ஆசற வீசும்
பகல்ஒளி செய்தும் அத்தா
மரையிலே
இகல்ஒளி செய்துஎம் பிரான்இருந்
தானே. 2

2683

விளங்கொளி அங்கி விரிகதிர்
சோமன்

துளங்கொளி பெற்றன சோதி யருள
வளங்கொளி பெற்றதே பேரொளி
வேறு
களங்கொளி செய்து கலந்து
நின்றானே. 3

2684
இளங்கொளி ஈசன் பிறப்பொன்றும்
இல்லி
துளங்கொளி ஞாயிறும் திங்களும்
கண்கள்
வளங்கொளி அங்கியும் மற்றைக்கண்
நெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காய
மாமே. 4

2685
மேல்ஒளி கீழ்அதன் மேவிய மாருதம்

பால்ஒளி அங்கி பரந்தொளி ஆகாசம்
நீர்ஒளி செய்து நெடுவிசும்பு
ஒன்றிலும்
மேல்ஒளி ஐந்தும் ஒருங்கொளி
யாமே. 5

2686
மின்னிய தூவொளி மேதக்க
செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்து பரத்தொளி
துன்னிய ஆறுஒளி தூய்மொழி
நாடொறும்
உன்னிய வாறுஒளி ஒத்தது தானே. 6

2667
விளங்கொளி மின்னொளி யாகிக்
கரந்து
துளங்கொளி ஈசனைச் சொல்லும்எப்

போதும்
உளங்கொளி ஊனிடை நின்றுயிர்க்
கின்ற
வளங்கொளி எங்கும் மருவிநின்
றானே. 7

2688
விளங்கொளி அவ்வொளி
அவ்விருள் மன்னும்
துளங்கொளி யான்தொழு வார்க்கும்
ஒளியான்
அளங்கொளி ஆரமு தாகநஞ் சாரும்
களங்கொளி ஈசன் கருத்தது தானே. 8

2689
இயலங்கியது எவ்வொளி
அவ்வொளி ஈசன்
துலங்கொளி போல்வது தூங்கருட்

சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர்
தோன்றி
உளங்கொளி யுள்ளே ஒருங்கிகின்
றானே. 9

2690
உலங்கொளி யாவதுஎன் உள்நின்ற
சீவன்
வளங்கொளி யாய்நின்ற மாமணிச்
சோதி
விளங்கொளி யாய்மின்னி
விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி ஆயத்து ளாகிநின்
றானே. 10

2691
விளங்கொளி யாய்நின்ற விகிர்தன்

இருந்த
துளங்கொளி பாசத்துள் தூங்கிருள்
சேராக்
களங்கிருள் நட்டமே கண்ணுதல் ஆட
விளங்கொளி உள்மனத்து ஒன்றிநின்
றானே. 11

2692
போது கருங்குழற் போனவர் தூதிடை
ஆதி பரத்தை அமரர் பிரானொடும்
சோதியும் அண்டத்துஅப் பாலுற்ற
தூவொளி
நீதியின் நல்லிருள் நீக்கிய வாறே. 12

2693
உண்டில்லை என்னும் உலகத்து
இயல்பிது
பண்டில்லை என்னும் பரங்கதி

யுண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட
கருத்துறில்
விண்டில்லை உள்ளே விளக்கொளி
யாமே. 13

2694
சுடருற ஓங்கிய ஒள்ளொளி ஆங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையின் ஆரிருள் வீசில்
உடலுறு ஞாலத் துறவியின் ஆமே.
14

2695
ஒளி பவ ளத்திரு மேனிவெண்
ணீற்றன்
அளிபவ ளச்சொம்பொன் ஆதிப்
பிரானும்

களிபவ ளத்தினன் காரிருள் நீங்கி
ஒளிபவ ளத்தென்னோடு ஈசன் நின்
றானே. 15

2696
ஈசன்நின் றான்இமை யோர்கள் நின்
றார்நின்ற
தேசம்ஒன் றின்றித் திகைத்துஇழைக்
கின்றனர்
பாசம்ஒன் றாகப் பழவினை பற்றற
வாசம்ஒன் றாமலர் போன்றது தானே.
16

2697
தானே யிருக்கும் அவற்றில்
தலைவனும்
தானே யிருக்கும் அவனென
நண்ணிடும்

வானாய் இருக்கும்இம் மாயிரு
ஞாலத்துப்
பானாய் இருக்கப் பரவலும் ஆமே.
17

5. தூல பஞ்சாக்கரம்

2698
ஐம்பது எழுத்தே அனைத்துவே
தங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்துஆக
மங்களும்
ஐம்பது எழுத்தின் அடைவை
அறிந்தபின்
ஐம்பது எழுத்தே அஞ்செழுத் தாமே.
1

2699

அகார முதலாக ஐம்பத்தொன்று ஆகி
உகார முதலாக ஓங்கி உதித்து
மகார இறுதியாய் மாய்ந்துமாய்ந்து
ஏறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே. 2

2700

அகராதி ஈரெண் கலந்த பரையும்
உகராதி தன்சத்தி உள்ளொளி ஈசன்
சிகராதி தான்சிவ வேதமே கோணம்
நகராதி தான்மூலமந்திரம் நண்ணுமே.
3

2701

வாயொடு கண்டம் இதயம் மருவுந்தி
ஆய இலிங்கம் அவற்றின்மேல்
அவ்வாய்த்
தூயதோர் துண்டம் இருமத்

தகம்செல்லல்
ஆயதுஈ றாம்ஐந்தோடு ஆம்எழுத்து
அஞ்சுமே. 4

2702
கிரணங்கள் ஏழும் கிளர்ந்தெரி
பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும்
போது
மரணம்கை வைத்துஉயிர் மாற்றிடும்
போதும்
அரணம்கை கூட்டுவது அஞ்செழுத்
தாமே. 5

2703
ஞாயிறு திங்கள் நவின்றெழு
காலத்தில்
ஆயுறு மந்திரம் ஆரும் அறிகிலார்

சேயுறு கண்ணி திருஎழுத்து
அஞ்சையும்
வாயுறு ஓதி வழுத்தலும் ஆமே. 6

2704
தெள்ளமுது ஊறச் சிவாய நமஎன்று
உள்ளமுது ஊற ஒருகால்
உரைத்திடும்
வெள்ளமுது ஊறல் விரும்பிஉண்
ணாதவர்
துள்ளிய நீர்போல் சுழல்கின்ற வாறே.
7

2705
குருவழி யாய குணங்களில் நின்று
கருவழி யாய கணக்கை அறுக்க
வரும்வழி மாள மறுக்கவல்
லார்கட்கு

அருள்வழி காட்டுவது அஞ்செழுத்
தாமே. 8

2706
வெறிக்க வினைத்துயிர் வந்திடும்
போது
செறிக்கின்ற நந்தி திருஎழுத்து ஓதும்
குறிப்பது உன்னில் குரைகழல்
கூட்டும்
குறிப்பறி வான்தவம் கோன்உரு
வாமே. 9

2707
நெஞ்சு நினைந்துதம் வாயாற்
பிரான்என்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள்
சரண்என்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை

அஞ்சில் இறைவன் அருள்பெற
லாமே. 10

2708
பிரான்வைத்த ஐந்தின் பெருமை
யுணராது
இராமாற்றம் செய்வார்கொல் ஏழை
மனிதர்
பராமுற்றும் கீழோடு பல்வகை
யாலும்
அராமுற்றும் சூழ்ந்த அகலிடம்
தானே. 11

## 6. சூக்கும பஞ்சாக்கரம்

2709
எளிய வாதுசெய் வார்எங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகும்

மனத்தராய்த்
தெளிய ஓதிச்சிவாயநம என்னும்
குளிகை யிட்டுப் பொன் னாக்குவன்
கூட்டையே. 1

2710
சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலம்ஐந்து
அகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவம்சேர்த்த பாசம் அணுககி
லாவே. 2

2711
சிவன்அரு ளாய சிவன்திரு நாமம்
சிவன்அருள் ஆன்மா திரோதம்
மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்

பவமது அகன்று பரசிவன் ஆமே. 3

2712
ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டு அவ்
ஆதி தனைவிட்டு இறையருள் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதும் சிவாயமலமற்ற உண்மையே. 4

2713
நமாதி நனாதி திரோதாயி யாகித்
தம்ஆதிய தாய்நிற்கத் தான்அந்தத் துற்றுச்
சமாதித் துரியம் தமதுஆகம் ஆகவே
நமாதி சமாதி சிவமாதல் எண்ணவே. 5

2714
அருள்தரும் ஆயமும் அத்தனும்
தம்மில்
ஒருவனை ஈன்றவர் உள்ளுறும்
மாயை
திரிமலம் நீங்கிச் சிவாயஎன்று ஓதும்
அருவினை தீர்fப்பதும் அவ்வெழுத்
தாமே. 6

2715
சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவும் தேர்ந்துள்
அடங்கச்
சிவசிவ ஆய தெளிவின் உள்
ளார்கள்
சிவசிவ ஆகும் திருவருள் ஆமே. 7

2716

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 8

2717

நவமென்னும் நாமத்தை நாவில்
ஒடுக்கிச்
சிவமென்னும் நாமத்தைச் சிந்தையுள்
ஏற்றப்
பவமது தீரும் பரிசும்அது அற்றால்
அவதி தீரும் அறும்பிறப்பு அன்றோ.
9

## 7. அதிசூக்கும பஞ்சாக்கரம்

2718

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆனந்தம்
ஆமே. 1

2719
செஞ்சுடர் மண்டலத்து ஊடுசென்று
அப்புறம்
அஞ்சண வும்முறை ஏறிவழிக்
கொண்டு
துஞ்சும் அவன்சொன்ன காலத்து
இறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற
லாகுமே. 2

2720
அங்கமும் ஆகம வேதமது ஓதினும்

எங்கள் பிரான்எழுத்து ஒன்றில்
இருப்பது
சங்கைகெட்டு அவ்எழுத்து
ஒன்றையும் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கலம் ஆமே.
3

2721
பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழித்துஅங்கு உறங்கும் வினைஅறி
வாரில்லை
எழுத்துஅறி வோம்என்று
உரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்துஅறி
யாரே. 4

## 8.1 திருக்கூத்து தரிசனம்

2722

எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம் எங்கும்
திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால்
எங்கெங்கும்
தங்கும் சிவனருள் தன்விளை
யாட்டதே. 1

2723

சிற்பரஞ் சோதி சிவானந்தக்
கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக்
கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப்
பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார்அறி வாரே.
2

## 8.2 சிவானந்தக் கூத்து

2724
தான்அந்தம் இல்லாச் சதானந்த
சத்திமேல்
தேன்உந்தும் ஆனந்த மாநடம்
கண்டீர்
ஞானம் கடந்து நடஞ்செய்யும்
நம்பிக்கு அங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங்கு
ஆனதே. 3

2725
ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம்
பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம்
வாச்சியம்

ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துஉகந்
தானுக்கே. 4

2726
ஒளியாம் பரமாம் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகும் சமயக்
களியார் பரமும் கருதுறை யந்தக்
தெளிவாம் சிவானந்த நட்டத்தின்
சித்தியே. 5

2727
ஆன நடம்ஐந்து அகள சகளத்தர்
ஆன நடமாடி ஐங்கரு மத்தாக
ஆன தொழில்அரு ளால்ஐந்
தொழில்செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே.
6

2728
பூதாண்ட பேதாண்ட போகாண்ட
யோகண்ட
மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட
தேகாண்ட
தாகாண்ட ஐங்கரு மாத்தாண்ட
தற்பரத்து
ஏகாந்த மாம்பிர மாண்டத்த
என்பவே. 7

2729
வேதங்கள் ஆட மிகுஆ கமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளர்அண்டம்
ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதம்கொண் டாடினான் ஞானாந்தக்
கூத்தே. 8

2730
பூதங்கள் ஐந்தில் பொறியில்
புலன்ஐந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகும்ஆ
கமந்தன்னில்
ஓதும் கலைகாலம் ஊழியுடன்
அண்டப்
போதங்கள் ஐந்தில் புணர்ந்தாடும்
சித்தனே. 9

2731
தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து
மூவர்கள்
தாபதர் சத்தர் சமயம் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை
யாடவே. 10

## 8.3 சுந்தரக் கூத்து

2732
அண்டங்கள் ஏழினிக்கு அப்புறத்து
அப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத்து
உச்சிமேல்
கண்டம் கரியான் கருணை திருவுருக்
கொண்டுஅங்கு உமைகாணக்
கூத்துஉகந் தானே. 11

2733
கொடிகட்டி பாண்டுரங் கோடுசங்
காரம்
நடம் எட்டோ டு ஐந்துஆறு நாடியுள்
நாடும்
திடம்உற்று ஏழும்தேவ தாருவும்

தில்லை
வடம் உற்ற மாவனம் மன்னவன்
தானே. 12

2734
பரமாண்டத்து ஊடே பராசத்தி பாதம்
பரமாண்டத்து ஊடே படரொளி ஈசன்
பரமாண்டத்து ஊடே படர்தரு நாதம்
பரமாண்டத்து ஊடே பரன்நடம்
ஆடுமே. 13

2735
அங்குசம் என்ன எழுமார்க்கம்
போதத்தில்
தங்கிய தொந்தி எனும்தாள
ஒத்தினில்
சங்கரன் மூலநா டிக்குள் தரித்தாடல்
பொங்கிய காலம் புகும்போகல்

இல்லையே. 14

2736
ஆன்நந்தி யாடிபின் நவக் கூத்தாடிக்
கான்நந்தி யாடிக் கருத்தில் தரித்தாடி
மூனச் சுழுனையுள் ஆடி முடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தான் என்
நாதனே. 15

2737
சத்திகள் ஐந்தும் சிவபேதம்
தான்ஐந்தும்
முத்திகள் எட்டும் முதலாம் பதம்
எட்டும்
சித்திகள் எட்டும் சிவபதம்
தான்எட்டும்
சுத்திகள் எட்டு௱சன் தொல்நடம்
ஆடுமே. 16

2738
மேகங்கள் ஏழும் விரிகடல் தீவேழும்
தேகங்கள் சூழும் சிவபாற் கரன்
ஏழும்
தாகங்கள் ஏழும் சாந்திகள் ஏழும்
ஆகின்ற நந்தி அடிக்கீழ் அடங்குமே.
17

## 8.4 பொற்பதிக் கூத்து

2739
தெற்கு வடக்குக் கிழக்குமேற்கு
உச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு
முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத்து உபய
உபயத்துள்

தற்பரன் நின்று தனிநடம் செய்யுமே.
18

2740
அடிஆர் பவரே அடியவர் ஆமால்
அடியார்பொன் அம்பலத்து
ஆடல்கண்டாரே
அடியார் அரனடி ஆனந்தம் கண்டோ
ர்
அடியார் ஆனவர் அத்தருள்
உற்றோர். 19

2741
அடங்காத என்னை அடக்கி
அடிவைத்து
இடம்காண் பரானநத்தத் தேஎன்னை
இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக்

கூத்தன்
படம்தான்செய்து உள்ளுள்
படிந்திருந் தானே. 20

2742
உம்பரில் கூத்தனை உத்தமக்
கூத்தனைச்
செம்பொன் திருமன்றுள் சேவகக்
கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக்
கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில்வைத்
தேனே. 21

2743
மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக்
கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக்

கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக்
கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப்
பாரே. 22

2744
விம்மும் வெருவும் விழும்எழும்
மெய்சோரும்
தம்மையும் தாமறி யார்கள்
சதுர்கெடும்
செம்மை சிறந்த திருஅம்
பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத்து
அன்புவைப் பார்கட்கே. 23

2745
தேட்டறும் சிந்தை திகைப்பறும்

பிண்டத்துள்
வாட்டறும் கால்புந்தி யாகி
வரும்புலன்
ஒட்டறும் ஆசை அறும்உளத்து
ஆனந்த
நாட்ட முறுக்குறும் நாடகங்
காணவே. 24

2746
காளியோடு ஆடிக் கனகா
சலத்துஆடிக்
கூளியோடு ஆடிக் குவலயத் தேஆடி
நீடிய நீர்தீகால் நீள்வான் இடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே.
25

2747
மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை

கூரும்இவ் வானின் இலங்கைக்
குறியுறும்
சாரும் திலைவனத் தண்மா
மலயத்தூடு
ஏறும் கழுமுனை இவைசிவ பூமியே.
26

2748
பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலைஒண்
சுழுமுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டத்து எல்லையின்
ஈறே. 27

## 8.5 பொற்றில்லைக்கூத்து

2749

அண்டங்கள் ஓரேழும் அம்பொற்
பதியாகப்
பண்டைஆ காசங்கள் ஐந்தும்
பதியாகத்
தெண்டினில் சத்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந்
தானே. 28

2750
குரானந்த ரேகையாய்க் கூர்ந்த
குணமாம்
சிரானந்தம் பூரித்துத் தென்திசை
சேர்ந்து
புரானந்த போகனாய்ப் பூவையும்
தானும்
நிரானந்த மாகி நிருத்தஞ் செய்
தானே. 29

2751
ஆதி பரன்ஆட அங்கைக் கனலாட
ஓதும் சடையாட உன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோடு ஆடினான் நாதாந்த
நட்டமே. 30

2752
கும்பிட அம்பலத்து ஆடிய
கோன்நடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட
நட்டமாம்
செம்பொருள் ஆகும் சிவலோகம்
சேர்ந்துற்றால்
உம்பரம் மோனஞா ஞானந்தத்தில்
உண்மையே. 31

2753

மேதினி மூவேழ் மிகும்அண்டம்
ஓரேழு
சாதக மாகும் சமயங்கள் நூற்றெட்டு
நாதமொடு அந்தம் நடானந்தம்
நாற்பதம்
பாதியோடு ஆடிடும் பரன்இரு
பாதமே. 32

2754
இடைபிங் கலைஇம வானோடு
இலங்கை
நடுநின்ற மேரு நடுவாம் சுழுமுனை
கடவும் திலைவனம் கைகண்ட மூலம்
படர்பொன்றி என்னும் பரமாம்
பரமே. 33

2755
ஈறான கன்னி குமரியே காவிரி

வேறாம் நவதீர்த்தம் மிக்குள்ள
வெற்புஏழுள்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகம்
சுத்தமே. 34

2756
நாதத்தினில் ஆடி நாற்பதத் தேயாடி
வேதத்தில் ஆடித் தழல் அந்தம்
மீதாடி
போதத்தில் ஆடி புவனம் முழுதாடும்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே. 35

2757
தேவரோடு ஆடித் திருஅம்பலத்து
ஆடி
மூவரோடு ஆடி முனிசனத் தோடு
ஆடிப்

பாவினுள் ஆடிப் பராசத் தியில்
ஆடிக்
கோவினுள் ஆடிடும் கூத்தப்
பிரானே. 36

2758
ஆறு முகத்தில் அதிபதி நான்என்றும்
கூறு சமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தெற்குத் திருஅம்ப லத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின்
றானே. 37

2759
அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளின் ஈரொளி
உம்பர மாம்ஐந்து நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந்
தருளுமே. 38

2760
ஆடிய காலும் அதிற்சிலம்பு ஓசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன்
கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே.
39

2761
இருதயம் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினில் மாணிக்கக்
கூத்தன்
குரவனயாய் எங்கணும் கூத்துகந்
தானே. 40

## 8.6 அற்புதக் கூத்து

2762
குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவது அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாகும் உமையவள் தானே
41

2763
திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக்குனிக்கும் உருவே
உருஅரு வாவதும் உற்றுணர்ந்
தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி
தானே. 42

2764
நீரும் சிரிசிடைப் பன்னிரண்டு

அங்குலம்
ஓடும் உயிர்எழுந்து ஓங்கி உதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு
மான்உகந்து
ஆடும் இடந்திரு அம்பலந் தானே.
43

2765
வளிமேகம் மின்வில்லு வானகஓசை
தெளிய விசும்பில் திகழ்தரு
மாறுபோல்
களிஒளி ஆறும் கலந்துடன் வேறாய்
ஒளியுரு வாகி ஒளித்துநின் றானே.
44

2766
தீமுதல் ஐந்தும் திசை எட்டும்
கீழ்மேலும்

ஆயும் அறிவினுக்கு அப்புறம்
ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின்
றார்காண
நாயகன் நின்று நடஞ்செய்யும் ஆறே.
45

2767
கூத்தன் கலந்திடும் கோல்வளை
யாளொடும்
கூத்தன் கலந்திடும் கோதிலா
ஆனந்தம்
கூத்தன் கலந்திடும் கோதிலா
ஞானத்துக்
கூத்தனும் கூத்தியும் கூத்ததின்
மேலே. 46

2768

இடம்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலும் தாமாய்நின்று ஆடுகின் றாரே. 47

2769
சத்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த ஆனந்தம் உமையவள் மேனியாம்
சத்தி வடிவு சகளத்து எழுந்துஇரண்டு
ஒத்த ஆனந்தம் ஒருநட மாமே. 48

2770
நெற்றிக்கு நேரே புருவத்து

இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாற்ப் பரமன்
இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண்
டேனே. 49

2771
அண்டங்கள் தத்துவ மாகிச் சதாசிவம்
தண்டினில் சாத்தவி சாம்பவி ஆதனம்
தெண்டினில் ஏழும் சிவாசன மாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்துகந்
தானே. 50

2772
மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது தான்இதழ் நாலொடு
நூறவை

சென்றுஅது தான்ஒரு பத்திரு நூறுள
நின்றது தான்நெடு மண்டல மாமே.
51

2773
அண்டம் எழுகோடி பிண்டம்
எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள்
எழுகோடி
எண்டிசை சூழ்ந்த இலிங்கம்
எழுகோடி
அண்ட நடஞ்செயும் ஆலயம் தானே.
52

2774
ஆகாச மாம்உடல் அங்கார்
முயலகன்
ஏகாச மாம்திசை எட்டும்

திருக்கைகண்
மோகாய முக்கண்கள் மூன்றொளி
தானாக
மாகாய மன்றுள் நடஞ்செய்கின்
றானே. 53

2775
அம்பல மாவது அகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே.
54

2776
கூடிய திண்முழ வம்குழல் ஓமென்று
ஆடிய மானுடர் ஆதிப் பிரான் என்ன
நாடிய நற்கணம் ஆரம்பல் பூதங்கள்
பாடிய வாறுஒரு பாண்டரங் காமே.

55

2777
அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத்
தேவர்கள்
தெண்டிசை சூழ்புவிக் குள்ளுள்ள
தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம்
பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே.
56

2778
புளிக்கண்ட வர்க்குப் புனலூறு
மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கு
எல்லாம்
துளிக்கும் அருட் கண்ணீர் சோர்நெஞ்

சுருக்கும்
ஒளிக்குள்ஆ னந்தத்து அமுதூறும்
உள்ளத்தே. 57

2779
திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
உண்டார்க்கு உணவுண்டால்
உன்மத்தம் சித்திக்கும்
கொண்டாடு மன்றுள் குனிக்கும்
திருக்கூத்துக்
கண்டார் வருங்குணம் கேட்டார்க்கும்
ஒக்குமே. 58

2780
அங்கி தமருகம் அக்குமா லைபாசம்
அங்குசம் சூலம் கபாலம்
உடன்ஞானம்
தங்குஉ பயந்தரு நீல மும்உடன்

மங்கையோர் பாகமாய் மாநடம்
ஆடுமே. 59

2781
ஆடல் பதினோர் உறுப்பும்
அடைவாகக்
கூடிய பாதம் சிலம்புகைக் கொள்துடி
நீடிய நாதம் பராற்பர நேயத்தே
ஆடிய நந்தி புறம்அகந் தானே. 60

2782
ஒன்பதும் ஆட ஒருபதி னாறுஆட
அன்புறு மார்க்கங்கள் ஆறும்
உடனாட
இன்புறும் ஏழினும் ஏழுஐம்பத்
தாறுஆட
அன்பதும் ஆடினான் ஆனந்தக்
கூத்தே. 61

2783
ஏழினில் ஏழாய் இகழ்ந்தெழுந்து
ஏழதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்துஅமைந்து
ஒன்றாகி
ஏழினில் சன்மார்க்கம் எங்கள்
பரஞ்சோதி
ஏழிசை நாடகத் தேஇசைந் தானே. 62

2784
மூன்றினில் அஞ்சாகி முந்நூற்று
அறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர்
மூலமாய்
மூன்றின்இலக்கம் முடிவாகி
முந்தியே
மூன்றிலும் ஆடினான் மோகாந்தக்

கூத்தே. 63

2785
தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி ஈசன் மலரடித் தாளினை
வாமணி அன்புடை யார்மனத்
துள்ளெழுங்
காமணி ஞாலம் கடந்துநின் றானே.
64

2786
புரிந்தவன் ஆடில் புவனங்கள் ஆடும்
தெரிந்தவன் ஆடும் அளவுளங்கள்
சிந்தை
புரிந்தவன் ஆடில்பல்பூதங்கள் ஆடும்
எரிந்தவன் ஆடல்கண்டு இன்புற்ற
வாறே. 65

2787
ஆதி நடஞ்செய்தான் என்பர்கள்
ஆதர்கள்
ஆதி நடஞ்செய்கை யாரும் அறிகிலர்
ஆதி நடமாடல் ஆரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாம் அருட் சத்தியே.
66

2788
ஒன்பதோடு ஒன்பதாம் உற்ற
இருபதத்து
அன்புறு கோணம் அதிபதந்து
ஆடிடத்
துன்புறு சத்தியுள் தோன்றிநின்று
ஆடவே
அன்புறு எந்தை நின்று ஆடலுற்
றானே. 67

2789

தத்துவம் ஆடச் சதாசிவம் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக்
கூத்தே. 68

2790

இருவருங் காண எழில்அம் பலத்தே
உருவோடு அருவோடு ஒருபர
ரூபமாய்த்
திருவருள் சத்திக்குள் சித்தன்ஆ
னந்தன்
அருளுரு வாகிநின்று ஆடலுற்
றானே. 69

2791

சிவமாட சத்தியும் ஆடச் சகத்தில்

அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவம் நாதாந்தம் ஆடச்
சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத்
துள்ளே. 70

2792
நாதத்தின் அந்தமும் நாற்போத
அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவா
னாந்தமும்
தாதற்ற நல்ல சதாசிவா னந்தத்து
நாதப் பிரமம் சிவநாட மாமே. 71

2793
சிவமாதி ஐவர்திண் டாட்டமும் தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் பரன்எங்கும் தானாக ஆடும்
தவமாம் சிவானந்தத் தோர் ஞானக்

கூத்தே. 72

2794
கூடிநின் றானொடு காலத்துத்
தேவர்கள்
வீடநின் றான்விகிர் தா என்னும்
நாமத்தைத்
தேடநின் றான்திக ழுஞ்சுடர்
மூன்றொளி
ஆடநின் றான்என்னை ஆட்கொண்ட
வாறே. 73

2795
நாதத் துவம்கடந்து ஆதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம்
எய்தினர்
நேதத் துவமும் அவற்றோடு
நேதியும்

பேதப் படாவண்ணம் பின்னிநின்
றானே. 74

2796
ஆனந்தம் ஆனந்தம் என்பர்
அறிவிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிகிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிந்தபின்
தான் அந்தம் அற்றிடம் ஆனந்த
மாமே. 75

2797
திருந்துநல் சீஎன்று உதறிய கையும்
அருந்தவர் வாஎன்று அணைத்த
மலர்க்கையும்
பொருந்த அமைப்பில் அவ்வென்ற
பொற்கையும்
திருந்தநல் தீயாகும் திருநிலை

மவ்வே. 76

2798
மருவும் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே.
77

2799
அரன்துடி தோற்றம் அமைத்தல்
திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்
காரம்
அரன் உற்று அணைப்பில் அமரும்
திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம்
என்னே. 78

2800
தீத்திரன் சோதி திகழ்ஒளி உள்ஒளி
கூத்தனைக் கண்டஅக் கோமளக்
கண்ணினள்
மூர்த்திகள் மூவர் முதல்வன்
இடைசெல்லப்
பார்த்தனன் வேதங்கள் பாடினள்
தானே. 79

2801
நந்தியை எந்தையை ஞானத்
தலைவனை
மந்திரம் ஒன்றுள் மருவி அதுகடந்து
அந்தர வானத்தின் அப்புறத்து அப்பர
சுந்தரக் கூத்தனை என்சொல்லு
மாறே. 80

2802
சீய குருநந்தி திருஅம்ப லத்திலே
ஆயுறு மேனியை யாரும் அறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடும்
அத்தன்மை
ஆயுறு மேனி அணைபுக லாமே. 81

2803
தானான சத்தியும் தற்பரை
யாய்நிற்கும்
தானாம் பரற்கும் உயிர்க்கும் தரும்
இச்சை
ஞானாதி பேதம் நடத்தும் நடித்தருள்
ஆனால் அரனடி நேயத்த தாமே. 82

9. ஆகாசப் பேறு

2804

உள்ளத்துள் ஓம்என்ற ஈசன்
ஒருவனை
உள்ளத்து ளேயங்கி யாய ஒருவனை
உள்ளத்து ளேநீதி யாய ஒருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாய மாமே. 1

2805
பெருநில மாய் அண்ட
மாய்அண்டத்து அப்பால்
குருநில மாய்நின்ற கொள்கையன்
ஈசன்
பெருநில மாய்நின்று தாங்கிய
தாளோன்
அருநிலை யாய்நின்ற ஆதிப்
பிரானே. 2

2806
அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்

பிண்ட ஒளியால் பிதற்றும்
பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள்
ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது
தானே. 3

2807
பயனறு கன்னியர் போகத்தின்
உள்ளே
பயனுறும் ஆதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மால்அறி யாவகை
நின்றிட்டு
உயர்நெறி யாய்ஒளி ஒன்றது வாமே.
4

2808
அறிவுக்கு அறிவாம் அகண்ட

ஒளியும்
பிறிவா வலத்தினில் பேரொளி
மூன்றும்
அறியாது அடங்கிடும் அத்தன்
அடிக்குள்
பிறியாது இருக்கில் பெரும்காலம்
ஆமே. 5

2809
ஆகாச வண்ணன் அமரர்
குலக்கொழுந்து
ஏகாச மாசுணம் இட்டுஅங்கு
இருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்துநின்று
அப்புறம்
ஆகாச மாய்அங்கி வண்ணனும்
ஆமே. 6

2810
உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற
போது
குயில்கொண்ட பேதை குலாவி
உலாவி
வெயில்கொண்டு என்உள்ளம்
வெளியது ஆமே. 7

2811
நணுகில் அகல்கிலன் நாதன் உலகத்து
அணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி
வெளியைப்
பணியின் அமுதம் பருகலும் ஆமே.
8

2812

புறத்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசம்எம் ஆதி அறிவு
சிவத்துளா காசம் செழுஞ்சுடர் சோதி
சகத்துளா காசம் தானம்ச மாதியே. 9

## 10. ஞானோதயம்

2813
மனசந் தியில்கண்ட மனநன வாகும்
கனவுற ஆனந்தம் காண்டல் அதனை
வினவுற ஆனந்தம் மீதொழிவுஎன்ப
இனமுற்றான் நந்தி ஆனந்தம்
இரண்டே. 1

2814
கரியட்ட கையன் கபாலம்கை யேந்தி
எரியும் இளம்பிறை சூடும்எம்
மானை

அரியன் பெரியன் என்று ஆட்பட்டது அல்லால்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே. 2

2815
மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறியே சென்று
புக்கால் அருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் சுழல்வழி நாடுமின் நீரே. 3

2816
விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி

விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலும் ஆமே. 4

2817
தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே. 5

2818
விசும்பொன்று தாங்கிய
மெய்ஞ்ஞானத் துள்ளே

அசும்பினின்று ஊறியது ஆர்அமுது
ஆகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தம் கூடிநின் றானே.
6

2819
முத்தின் வயிரத்தின் முந்நீர்ப்
பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின்தூவொளி
மாணிக்கம்
ஒத்துஉயிர் அண்டத் துள் அமர்
சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய்
வீரே. 7

2820
நான்என்றும் தான்என்றும் நாடினேன்

நாடலும்
நான்என்றும் தான்என்றும்
இரண்டில்லை என்பது
நான்என்ற ஞான முதல்வனே
நல்கினான்
நான்என்ற நானும் நினைப்பு
ஒழிந்தேனே. 8

2821
ஞானத்தின் நன்னெறி நாதாந்த
நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென்று
அறிவோர்தல்
ஞானத்தின் நல்யோக நன்னிலை
யேநிற்றல்
ஞானத்தின் நன்மோக நாதாந்த
வேதமே. 9

2822
உய்யவல் லார்கட்கு உயிர்சிவ
ஞானமே
உய்யவல் லார்கட்கு உயிர்சிவ
தெய்வமே
உய்யவல் லார்கட்கு ஒடுக்கம்
பிரணவம்
உய்யவல் லார்அறி வுள்அறி வாமே.
10

2823
காணவல் லார்க்குஅவன் கண்ணின்
மணியொக்கும்
காணவல் லார்க்குக் கடலின்
அமுதொக்கும்
பேணவல் லார்க்கப் பிழைப்பிலன்
பேர்நந்தி
ஆணவல் லார்க்கே அவன்துணை

யாமே. 11

2824
ஓம்என்றும் எழுத் துள்நின்ற
ஓசைபோல்
மேல்நின்ற தேவர் விரும்பும்
விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு
மானடி
ஆய்கின்ற தேவர் அகம்படி யாமே.
12

11. சத்திய ஞானானந்தம்

2825
எப்பாழும் பாழும் யாவுமாய்
அன்றாகி
முப்பாழும் கீழுள முப்பாழும்

முன்னியே
இப்பாழும் இன்னாவாறு
என்பதில்லா இன்பத்துத்
தற்பரஞ் ஞானந்தர் தானது வாகுமே. 1

2826
தொம்பதம் தற்பதஞ் சொன்ன துரியம்போல்
நம்பிய மூன்றாம் துரியத்து நன்றாகும்
அம்புவி யுன்னா அதிசூக்கம் அப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. 2

2827
மன்னும் சத்தியாதி மணியொளி

மாசோயை
அன்னதோடு ஒப்பம் இடல்ஒன்றா மாறது
இன்னிய உற்பலம் ஒண்சீர் நிறமணம்
பன்னிய சோபை பகர்ஆறும் ஆனதே. 3

## 2828

சத்தி சிவன்பர ஞானமும் சாற்றுங்கால்
உய்த்த அனந்தம் சிவமுயர் ஆனந்தம்
வைத்த சொருபத்த சத்தி வருகுரு
உய்த்த உடல்இவை உற்பலம் போலுமே. 4

## 2829

உருஉற் பலநிறம் ஒண்மணம்

சோபை
தரநிற்ப போல்உயிர் தற்பரன்
தன்னில்
மருவச் சிவம்என்ற மாமுப் பதத்தின்
சொரூபத்தின் சத்தியாதி தோன்றநின்
றானே. 5

2830
நினையும் அளவில் நெகிழ
வணங்கிப்
புனையில் அவனைப் பொதியலும்
ஆகும்
எனையும் எங்கோன்நந்தி தன்னருள்
கூட்டி
நினையும் அளவில் நினைப்பித்
தனனே. 6

2831

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபடி உள்புகச்
சீல மயிர்க்கால் தொறும்தேக் கிடுமே.
7

2832
அமரத் துவம்கடந்து அண்டம் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்
பவளத்து முத்தும் பனிமொழி மாதர்
துவளற்ற சோதி தொடர்ந்துநின்
றானே. 8

2833
மத்திமம் ஆறாறு மாற்றி மலநீக்கிச்
சுத்தம தாகும் துரியத் துரிசற்றுப்
பெத்த மறச்சிவ மாகிப் பிறழ்வுற்றும்
சத்திய ஞா னானந்தம் சார்ந்தனன்

ஞானியே. 9

2834
சிவமாய் அவமான மும்மலம் தீரப்
பவமான முப்பாழைப் பற்றறப்
பற்றத்
தவமான சத்திய ஞானானந் தத்தே
துவமார் துரியம் சொரூபம் தாமே. 10

## 12. சொரூப உதயம்

2835
பரம குரவன் பரம்எங்கு மாகித்
திரமுற எங்கணும் சேர்ந்துஒழி வற்று
நிரவும் சொரூபத்துள் நீடும் சொரூபம்
அரிய துரியத்து அணைந்துநின்
றானே. 1

2836

குலைக்கின்ற நீரின் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடு ஆகாசம்
நிலத்திடை வானிடை நீண்டகன் றானை
வரைந்து வலம்செயு மாறுஅறி யேனே. 2

2837

அங்குநின் றான்அயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் றாரும் இறைவன் என்று ஏத்துவர்
தங்கிநின் றான்தனிநாயகன் எம்இறை
பொங்கிநின் றான்புவ னாபதி தானே. 3

2838
சமயச் சுவடும் தனையறி யாமல்
சுமையற்ற காமாதி காரணம் எட்டும்
திமிரச் செயலும் தெளிவுடன்
நின்றோர்
அமரர்க்கு அதிபதி யாகிநிற் பாரே. 4

2839
மூவகைத் தெய்வத்து ஒருவன்
முதல்உரு
வாய்அது வேறாம் அதுபோல்
அணுப்பரன்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறியென்று இறைநூல்
இயம்புமே. 5

2840

உருவன்றி யேநின்று உருவம்
புணர்க்கும்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
அருவன்றி யேநின்ற மாயப்
பிரானைக்
குருவன்றி யாவர்க்கும் கூடஒண்
ணாதே. 6

2841
உருவம் நினைப்பவர்க்கு உள்ளுறும்
சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும்
காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பரும்
ஆவர்
உருவம் நினைப்பவர் உலகத்தில்
யாரே. 7

2842

பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்
பரஞ்சோதி என்னுள் படிந்துஅதன் பின்னைப்
பரஞ்சோதி யுள்நான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே. 8

2943

சொரூபம் உருவம் குணம்தொல் விழுங்கி
அரியன உற்பலம் ஆமாறு போல
மருவிய சத்தியாதி நான்கும் மதித்த
சொரூபக்குரவன் சுகோதயத் தானே. 9

2944

உரையற்ற ஆனந்த மோன
சொரூபத்தின்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற்று உகாரம் மகாரம தாக
உரையற்ற காரத்தில் உள்ளொளி
யாமே. 10

2845
தலைநின்ற தாழ்வரை மீது
தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை
யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனில் கண்டுகொண்
டேனே. 11

2846
ஆமாறு அறிந்தேன் அகத்தின்

அரும்பொருள்
போமாறு அறிந்தேன் புகுமாறும்
ஈதென்றே
ஏமாப்ப தில்லை இனியோர்
இடமில்லை
நாமாம் முதல்வனும் நான்என
லாமே. 12

13. ஊழ்

2847
செற்றிலென் சீவிலென் செஞ்சாந்து
அணியலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே.
1

2848
தான்முன்னம் செய்த விதிவழி
தானல்லால்
வான்முன்னம் செய்தங்கு
வைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னம் சென்னி குறிவழி
யேசென்று
நான்முன்னம் செய்ததே நன்னில
மானதே. 2

2849
ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி
வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டுஎன் உள்ளம் பிரியகில்
லாவே. 3

2850

வான்நின்று இடிக்கில்என் மாகடல்
பொங்கிலென்
கான்நின்ற செந்தீக் கலந்துடல்
வேகில்என்
தான்ஒன்றி மாருதம் சண்டம்
அடிக்கிலென்
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே.
4

2851

ஆனை துரக்கிலென் அம்பூடு
அறுக்கிலென்
கானத்து உழுவை கலந்து
வளைக்கிலென்
ஏனைப் பதியினில் என்பெரு
மான்வைத்த
ஞானத்து உழவினை நான்உழு

வேனே. 5

2852
கூடு கெடின்மற்றோர் கூடுசெய்
வான்உளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லை
வீடு கெடின்மற்றோர் வீடுபுக்
கால்ஒக்கும்
பாடது நந்தி பரிசறி வார்க்கே. 6

14. சிவ தரிசனம்

2853
சிந்தையது என்னச் சிவனென்ன
வேறில்லை
சிந்தையின் உள்ளே சிவனும்
வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல்

லார்கட்குச்
சிந்தையின் உள்ளே
சிவனிருந்தானே. 1

2854
வாக்கும் மனமும் மறைந்த
மறைபொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள்
நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை
கேடில்லை
யாக்கமும் அத்தனை ஆய்ந்துகொள்
வார்க்கே. 2

2855
பரனாய்ப் பராபர னாகிஅப்
பால்சென்று
உரனாய் வழக்கற ஒண்சுடர் தானாய்

தரனாய் தனதென ஆறுஅறி
வொண்ணா
அரனாய் உலகில் அருள்புரிந் தானே.
3

## 15. சிவ சொரூப தரிசனம்

2856
ஓதும் மயிரக்கால் தோறும் அமு
தூரிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்றுஅகன்று
அப்பாலை
வேதம் ஓதும் சொரூபிதன்
மேன்மையே. 1

2857
உணர்வும் அவனே உயிரும் அவனே

புணரும் அவனே புலவி அவனே
இணரும் அவன்தன்னை எண்ணலும்
ஆகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின்
றானே. 2

2858
துன்னிநின் றான்தன்னை உன்னிமுன்
னாஇரும்
முன்னி அவர்தம் குறையை
முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன்
மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்தின்
ஆமே. 3

2859
மின்னுற்ற சிந்தை விழித்தேன்

விழித்தலும்
தன்னுற்ற சோதி தலைவன்
இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை
நந்தியும்
என்னுற்று அறிவன்நான் என்விழித்
தானே. 4

2860
சத்திய ஞானத் தனிப்பொருள்
ஆனந்தம்
சித்தத்தின் நில்லாச் சிவானந்தப்
பேரொளி
சுத்தப் பிரம துரியம் துரியத்துள்
உய்த்த துரியத்து உறுபே ரொளியே.
5

2861

பரன்அல்ல நீடும் பராபரன் அல்ல
உரன்அல்ல மீதுணர் ஒண்சுடர் அல்ல
தரன்அல்ல தான்அவை யாய்அல்ல
வாகும்
அரன்அல்ல ஆனந்தத்து
அப்புறத்தானே. 6

2862
முத்தியும் சித்தியும் முற்றிய
ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள்
நின்றுமா
சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவங்
கூடலால்
சுத்தி யகன்றொர் சுகானந்த போதரே.
7

2863

துரிய அதீதம் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியும் குவியும் விள்ளா
மிளிரும்தன்
உருவும் திரியும் உரைப்பது
எவ்வாறே. 8

## 16. முத்தி பேதம், கரும நிருவாணம்

2864
ஓதிய முத்தியடைவே உயிர்பர
பேத மில் அச்சிவம் எய்தும்
துரியமோடு
ஆதி சொரூபம் சொரூபத்த தாகவே
ஏதமி லாநிரு வாணம் பிறந்ததே. 1

2865
பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்

சுற்றற் றவர்சுற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றான்
சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந்
தாரே. 2

## 17. சூனிய சம்பாஷணை

2866
காயம் பலகை கவறைந்து
கண்மூன்றாய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோர்
அக்கரம்
ஏய பெருமான்இருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே.
1

2867

தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி
வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் கிடந்தஞெதன் உள்ளன்பு தானே.
2

2868
ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறுபடுவன நான்கு பனையுள
ஏறற்கு அரியதோர் ஏணியிட்டு
அப்பனை
ஏற்றலு றேன்கடல் ஏழுங்கண்
டேனே. 3

2869
வழுதலை வித்திடப் பாகன்
முளைத்தது

புழுதியைத் தோண்டினேன் பூசணி
பூத்தது
தொழுதுகொண்டு ஓடினோர்
தோட்டக் குடிகண்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.
4

2870
ஐஎன்னும் வித்தினில் ஆனை
விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவுஅறி
வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறின்
அந்நிலம்
பொய்யொன்றும் இன்றிப் புகஎளி
தாமே. 5

2871

பள்ளச்செய் ஒன்றுண்டு பாடச்செய்
இரண்டுள
கள்ளச்செய் அங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் அங்கே உழவுசெய்
வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது
தானே. 6

2872
மூவணை ஏரும் உழுவது முக்காணி
தாமணி கோலித் தறியுறப்
பாய்ந்திடும்
நாஅணைகோலி நடுவில் செறுஉழார்
காலணை கோலிக்களர்உழு வாரே. 7

2873
ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தான் இறைக்க இளையான்

படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடில்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே. 8

2874
பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோர்ஏழுளு ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே. 9

2875
ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒரு குடம் பால்போதும்

காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங்
காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவுஅறி யோமே.
10

2876
தட்டான் அசுத்தில் தலையான
மச்சின்மேல்
மொட்டாய் எழுந்தது செம்பால்
மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை
மடித்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண்
டானே. 11

2877
அரிக்கின்ற நாற்றங்கால் அல்லல்
கழனி

திரிக்கின்ற ஒட்டம்சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற நல்ஆன் கறவையைப்
பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித்
தாமே. 12

2878
இடாக்கொண்டு தூவி எருவிட்டு
வித்திக்
கிடாக் கொண்டு பூட்டிக் கிளறி
முளையை
மிடாக் கொண்டு சோறட்டு மெள்ள
விழுங்கார்
கிடாக்கொண்டு செந்நெல்
அறுக்கின்ற வாறே. 13

2879
விளைந்து கிடந்தது மேலைக்கு

வித்தது
விளைந்து கிடந்தது மேலைக்குக்
காதம்
விளைந்து விளைந்து
விளைந்துகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது மேவுமுக்
காதமே. 14

2880
களர்உழு வார்கள் கருத்தை
அறியோம்
களர்உழு வார்கள் கருதலும்
இல்லைக்
களர்உழு வார்கள் களரின் முளைத்த
வளர்இள வஞ்சியின்மாய்தலும்
ஆமே. 15

2881

கூப்பிடு கொள்ளாக் குறுநரி
கொட்டகத்து
ஆப்பிடு பாசத்தை அங்கியுள்
வைத்திட்டு
நாட்பட நின்று நலம்புகுந்து ஆயிழை
ஏற்பட இல்லத்து இனிதிருந்தானே.
16

2882
மலைமேல் மழைபெய்ய மான்கன்று
துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக்
கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழியவைத்
தானே. 17

2883

பார்ப்பான் அகத்திலே பாற்பசு
ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத்
திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும்
அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச்
சொரியுமே. 18

2884
ஆமாக்கள் ஐந்தும் அரியேறு
முப்பதும்
தேமா இரண்டொடு திப்பிலி
ஒன்பதும்
தாமாக் குரங்கொளில் தம்மனத்
துள்ளன
மூவாக் கடாவிடின் மூட்டுகின் றாரே.
19

2885
எழுதாத புத்தகத்து ஏட்டின்
பொருளைத்
தெருளாத கன்னி தெறிந்திருந்து ஓத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே.
20

2886
போகின்ற பொய்யும் புகுகின்ற
பொய்வித்தும்
கூகின்ற நாவலின் கூழைத் தருங்கனி
ஆநின்ற வைங்கூழ் அவையுண்ணும்
ஐவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றாரே.
21

2887
மூங்கில் முளையில் எழுந்ததோர்
வேம்புண்டு
வேம்பினில் சார்ந்து கிடந்த
பனையிலோர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின்
பார்இின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே.
22

2888
பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் வினோகர் ஈ ரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்து நின் றாரே.
23

2889

இரண்டு கடாவுண்டு இவ்வூரின்
உள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே
தொழும்பின்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே.
24

2890
ஒத்த மனக்கொல்லை உள்ளே
சமன்கட்டிப்
பத்தி வலையில் பருத்தி நிறுத்தலால்
முத்தம் கயிறாக மூவர்கள் ஊரினுள்
நித்தம் பொருது நிரம்பநின் றாரே. 25

2891
கூகையும் பாம்பும் கிளியொடு
பூஞையும்

நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுகல் உறுதலும்
கூகையைக் கண்டெலி கூப்பிடு
மாறே. 26

2892
குலைக்கின்ற நன்னகை யாம்கொங்கு
உழக்கின்
நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று
கொணர்ந்தான்
உலைக்குப் புறமெனில் ஓடும்
இருக்கும்
புலைக்குப் பிறந்தவை போகின்ற
வாறே. 27

2893
காடுபுக் கார்இனிக் காணார்
கருவெளி

கூடுபுக்கு ஆனது ஐந்து குதிரையும்
மூடுபுக்கு ஆனது ஆறுள ஒட்டகம்
மூடு புகாவிடின் மூவனை யாமே. 28

2894

கூறையும் சோறும் குழாயகத்து
எண்ணெயும்
காறையும் நாணும் வளையலும்
கண்டவர்
பாறையில் உற்ற பறக்கின்ற
சீலைபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றாரே.
29

2895

துருத்தியுள் அக்கரை தோன்றும்
மலைமேல்
விருத்திகண் காணிக்கப் போவார்முப்

போதும்
வருத்திஉள் நின்ற மலையைத்
தவிர்ப்பாள்
ஒருத்திஉள் ளாள்அவர் ஊர்அறி
யோமே. 30

2896
பருந்துங் கிளியும் படுபறை
கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்
பெருந்தவப் பூதம் போலுரு வாகும்
இருந்திய பேற்றினில் இன்புறு
வாரே. 31

2897
கூடும் பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக்கு உண்டி அறுக்குறில்
என்ஒக்கும்

சூடுஎறி நெய்யுண்டு மைகான்று
இடுகின்ற
பாடுஅறி வார்க்குப் பயன்எளி
தாமே. 32

2898
இலைஇல்லை பூவுண்டு இனவண்டு
இங்கில்லை
தலைஇல்லை வேர்உண்டு
தாள்இல்லை பூவின்
குலைஇல்லை கொய்யும் மலர்உண்டு
சூடும்
தலைஇல்லை தாழ்ந்த கிளைபுல
ராதே. 33

2899
அக்கரை நின்றதோர் ஆல
மரங்கண்டு

நக்கரை வாழ்த்தி நடுவே
பயன்கொள்வர்
மிக்கவர் அஞ்சு துயரமும்
கண்டுபோய்த்
தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறே.
34

2900
கூப்பிடும் ஆற்றிலே வன்காடு
இருகாதம்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றார்உளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர்
தொடர்ந்திட்டுக்
கூப்பிட மீண்டதோர் கூரை கொண்
டாரே. 35

2901
கொட்டியும் ஆம்பலும் பூத்த

குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர்
வாழையும்
கட்டியும் தேனும் கலந்துண்ண
மாட்டாதார்
எட்டிப் பழத்துக்கு இளைக்கின்ற
வாறே. 36

2902
பெடைவண்டும் ஆண்வண்டும்
பீடிகை வண்ணக்
குடைகொண்ட பாசத்துக் கோலம்
உண் டானும்
கடைவண்டு தான் உண்ணும்
கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்றது
இன்பமும் ஆமே. 37

2903
கொல்லையில் மேயும் பசுக்களைச்
செய்வதன்
எல்லை கடப்பித்து இறையடிக்
கூட்டியே
வல்லசெய்து ஆற்றல் மதித்தபின்
அல்லது
கொல்லசெய் நெஞ்சம் குறியறி
யாதே. 38

2904
தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரில் குவளை எழுந்தது
விட்டத்தின் உள்ளே விளங்கவல்
லார்கட்குக்
குட்டத்தில் கிட்டதோர் கொம்மட்டி
யாமே. 39

2905

ஆறு பறவைகள் ஐந்தக்து உள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின்
மேலன
ஏறும் பெரும்பதி ஏழுங் கடந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே. 40

2906

கொட்டனஞ் செய்து குளிக்கின்ற
கூவலுள்
வட்டனப் பூமி மருவிவந் தூறிடுங்
கட்டனஞ் செய்து கயிற்றால்
தொழுமியுள்
ஒட்டனஞ் செய்தொளி யாவர்க்கு
மாமே. 41

2707

ஏழு வளைகடல் எட்டுக் குலவரை

யாழும் விசும்பினில் அங்கி
மழைவளி
தாழு மிருநிலந் தன்மை ய்துகண்டு
வாழ நினைக்கில தாலய மாமே. 42

2908
ஆலிங் கனஞ்செய்து அகம்சுடச்
சூலத்துச்
சால்இங்கு அமைத்துத் தலைமை
தவிர்த்தனர்
கோல்இங்கு அமைத்தபின் கூடப்
பறவைகள்
மால்இங்கன் வைத்துஅது முன்பின்
வழியே. 43

2909
கொட்டுக்கும் தாலி இரண்டே
இரண்டுக்கும்

கொட்டுக்கும் தாலிக்கும் பாரை
வலிதென்பர்
கொட்டுக்கும் தாலிக்கும் பாரைக்கும்
மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளே.
44

2910
கயலொன்று கண்டவர் கண்டே
இருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரும்
உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பான்
ஒருவன்
மறையொன்று கண்ட துருவம் போ
லாமே. 45

2911

கோரை எழுந்து கிடந்த குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படுக்கின்றாற் போலல்ல
நாதனார்
பாரை கிடக்கப் படிகின்ற வாறே. 46

2912
கொல்லைமுக் காதமும் காடுஅரைக்
காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இருநெறி
எல்லை மயங்காது இயங்க வல்
லார்கட்கு
ஒல்லை கடந்துசென்று ஊர்புக
லாமே. 47

2913
உழவொன்று வித்து ஒருங்கின
காலத்து

எழுமழை பெய்யாது இருநிலச்
செல்வி
தழுவி வினைசெய்து தான்பய வாது
வழுவாது போவன் வளர்சடை
யோனே. 48

2914
பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவ
மதுங்கிய வார்களி ஆரமுது ஊறப்
பொதுங்கிய ஐவரைப் போய்வளைத்
தானே. 49

2915
தோணியொன்று ஏறித் தொடர்ந்து
கடல்புக்கு
வாணிபம் செய்து வழங்கி
வளர்மகன்

நீலிக்கு இறையுமே நெஞ்சின் நிலைதளர்ந்து
ஆலிப் பழம்போல் அளிக்கின்ற அப்பே. 50

2916
முக்காதம் ஆற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த திரிமலம் காய்த்தன
பக்கனார் மிக்கார் படங்கினார் கன்னியர்
நக்கு மலருண்டு நடுவுநின் றாரே. 51

2917
அடியும் முடியும் அமைந்ததோர் ஆத்தி
முடியும் நுனியின் கண் முத்தலை மூங்கில்

கொடியும் படையும் கோட்சரன் ஐஐந்து
மடியும் வலம்புரி வாய்த்தது அவ் வாறே. 52

2918
பன்றியும் பாம்பும் பசுமுசு வானரம்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துக்
குன்றாமை கூடித் தராசின் நிறுத்தபின்
குன்றி நிறையைக் குறைக்கின்ற வாறே. 53

2919
மொட்டித்து எழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட்டு ஓடின் மலர்தலும் காணலாம்
பற்றுவிட்டு அம்மனை பாழ்பட

நோக்கினால்
கட்டுவிட் டார்க்கு அன்றிக்
காணஒண் ணாதே. 54

2920
நீரின்றிப் பாயும் நிலத்தினிற்
பச்சையாம்
யாவரும் என்றும் அறியவல்
லார்இல்லை
கூரும் மழைபொழி யாது
பொழிபுனல்
தேரின் இந் நீர்மை திடரின்நில்
லாதே. 55

2921
கூகை குருந்தமது ஏறிக் குணம் பயில்
மோகம் உலகுக்கு உணர்கின்ற
காலத்து

நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்
பாகனும் ஆகின்ற பண்பனும் ஆமே.
56

2922
வாழையும் கூரையும் வந்திடம்
கொண்டன
வாழைக்குச் கூரை வலிது
வலிதென்பர்
வாழையும் கூரையும் வன்துண்டம்
செய்திட்டு
வாழை இடம்கொண்டு வாழ்கின்ற
வாறே. 57

2923
நிலத்தைப் பிளந்து நெடுங்கடல்
ஒட்டிப்
புனத்துக் குறவன் புணர்ந்த

கொழுமீன்
விளக்குமின் யாவர்க்கும் வேண்டிற்
குறையாது
அருத்தமும் இன்றி அடுவதும் ஆமே.
58

2924
தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டான்
அகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை
நாடிக்
களிக்கும் குசவர்க்கும் காவிதி
யார்க்கும்
அளிக்கும் பதத்தொன்று ஆய்ந்து
கொள் வார்க்கே. 59

2925
குடைவிட்டுப் போந்தது கோயில்

எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி உள்ளலும்
ஊரார்
அடையா நெடுங்கடை ஐந்தொடு
நான்கே. 60

2926
போகின்ற எட்டும் புகுகின்ற
பத்தெட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது
வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடில் பன்றியும் ஆமே.
61

2927
பாசி பாடர்ந்து கிடந்த குளத்திடைக்

கூசி யிருக்கும் குருகு
இரைதேர்ந்துண்ணும்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே.
62

2928
கும்ப மலைமேல் எழுந்ததோர்
கொம்புண்டு
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர்
காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுடைப்
பூவக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வன்
ஈசனே. 63

2929
வீணையும் தண்டும் விரவி

இசைமுரல்
தாணுவும் மேவித் தருதலைப்
பெய்தது
வாணிபம் சிக்கென்று அதுஅடை
யாமுன்னம்
காணியும் அங்கே கலக்கின்ற வாறே.
64

2930
கொங்குபுக் காரொடு வாணிபம்
செய்தது
வங்குபுக் காலன்றி ஆய்ந்தறி
வாரில்லை
திங்கள்புக்கால் இருளாவது
அறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே. 65

2931

போதும் புலர்fந்தது பொன்னிறங்
கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கும் இருகரை
ஏதமில் ஈசன்இயங்கு நெறியிது
மாதர் இருந்ததோர் மண்டலம் தானே.
66

2932
கோமுற்று அமரும் குடிகளும்
தம்மிலே
காமுற்று அகத்தி இடுவர்
கடைபொறும்
வீவற்ற எல்லை விடாது வழிகாட்டி
யாமுற்ற அதட்டினால் ஐந்துண்ண
லாமே. 67

2933
தோட்டத்தில் மாம்பழம் தோண்டி

விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத்து
என்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை
முன்னிட்டு
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட
வாறே. 68

2934
புலர்ந்தது போதென்று புட்கள்
சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி
புல்லிப்
புலம்பின் அவளொடும் போகம்
நுகரும்
புலம்பனுக்கு என்றும் புலர்ந்திலை
போதே. 69

2935
தோணி ஒன்று உண்டு துறையில்
விடுவது
வாணி மிதித்துநின்று ஐவர்கோல்
ஊன்றலும்
வாணிபம் செய்வார் வழியிடை
ஆற்றிடை
ஆணி கலங்கில் அதுஇது வாமே. 70

## 18. மோன சமாதி

2936
நின்றார் இருந்தார் கிடந்தார்
எனஇல்லை
சென்றார்தம் சித்தம் மோன
சமாதியாம்
மன்றுஏயும் அங்கே மறைப்பொருள்
ஒன்றுண்டு

சென்றாங்கு அணைந்தவர் சேர்கின்ற
வாறே. 1

2937
காட்டும் குறியும் கடந்த அக் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத்து
என்பயன்
கூட்டும் குருநந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.
2

2938
உணர்வுடை யார்கட்கு உலகமும்
தோன்றும்
உணர்வுடை யார்கட்கு உறுதுயர்
இல்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்த
அக்காலம்

உணர்வுடை யார்கள் உணர்ந்து கண்
டாரே. 3

2939
மறப்பது வாய்நின்ற மாயநன்
னாடன்
பிறப்பினை நீங்கிய பேரரு ளாளன்
சிறப்பிடை யான்திரு மங்கையும்
தானும்
உறக்கமில் போகத்து உறங்கிடுந்
தானே. 4

2940
துரியங்கள் மூன்றும் கடந்தொளிர்
சோதி
அரிய துரியம் அதன்மீது மூன்றாய்
விரிவு குவிவு விழுங்கி உமிழ்ந்தே
உரையில் அநுபூ திகத்தினுள் ளானே.

5

2941
உருவிலி ஊனிலி ஊனம்ஒன்று
இல்லி
திருவிலி தீதிலி தேவர்க்கும் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்துஎன் மனம்புகுந்
தானே. 6

2942
கண்டறி வார்இல்லைக் காயத்தின்
நந்தியை
எண்டிசை யோரும் இறைவன் என்று
ஏத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே.
7

2943
தற்பரம் அல்ல சதாசிவன் தான்அல்ல
நிட்களம் அல்ல சகள நிலையல்ல
அற்புத மாகி அனுபோகக்
காமம்போல்
கற்பனை இன்றிக் கலந்துநின் றானே.
8

2944
முகத்திற் கண்கொண்டு காண்கின்ற
மூடர்கள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே
ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடு
ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால்
சொல்லுமாறு எங்ஙனே. 9

2945
அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரம் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பதம் மாயக் கலந்தமை
எப்படி அப்படி என்னும் அவ்வாறே. 10

2946
கண்டார்க்கு அழகிது காஞ்சிரத் தின்பழம்
தின்றார்க்கு அறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்தான் நிரம்பி மடவியள் ஆனால்
கொண்டான் அறிவன் குணம்பல தானே. 11

2947

நந்தி யிருந்தான் நடுவுத் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே ஒழிந்தன
உந்தியின் உள்ளே உதித்தெழும் சோதியைப்
புந்தியி னாலே புணர்ந்துகொண் டேனே. 12

2948

விதறு படாவண்ணம் வேறிருந்து ஆய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்ததக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றானே. 13

2949

வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் அறநெறி நாடொறும்
இன்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுடர்
உட்சென்று
நாடார் அமுதுற நாடார் அமுதமே.
14

2950
அதுக்கென்று இருவர் அமர்ந்த சொற்
கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு
மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக்
காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரும்
அன்றே. 15

2951
தானும் அழிந்து தனமும் அழிந்துநீடு
ஊனும் அழிந்து உயிரும்
அழிந்துடன்
வானும் அழிந்து மனமும்
அழிந்துபின்
நானும் அழிந்தமை நானறி யேனே.
16

2952
இருளும் வெளியும் இரண்டையும்
மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப்
பொருந்தவுள் ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன்
அடிக்கே
உருளாத கன்மனம் உற்றுநின் றேனே.
17

2953
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன்
பராபரம்
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன்
சிவகதி
ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன்
உணர்வினை
ஒன்றிநின் றேபல ஊழிகண் டேனே.
18

## 19. வரையுரை மாட்சி

2954
தான்வரைவு அற்றபின் ஆரை
வரைவது
தான்அவ னானபின் ஆரை
நினைவது

காமனை வென்றகண் ஆரை
உகப்பது
தூமொழி வாசகம் சொல்லுமின் நீரே.
1

2955
உரையற்றது ஒன்றை உரைசெய்யும்
ஊமர்காள்
கரையற்றது ஒன்றைக் கரைகாண
லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை
தெளிவார்க்குப்
புரையற்று இருந்தான் புரிசடை
யோனே. 2

2956
மனமாயை மாயைஇம் மாயை
மயக்கம்

மனமாயை தான்மாய மற்றொன்றும்
இல்லை
பினைமாய்வது இல்லை பிதற்றவும்
வேண்டா
தனைஆய்ந்து இருப்பது தத்துவந்
தானே. 3

## 20. அணைந்தோர் தன்மை

### 2957

மலமில்லை மாசில்லை மானாபி
மானம்
குலமில்லை கொள்ளும் குணங்களும்
இல்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி
னாலே
பலமன்னி அன்பில் பதித்துவைப்
போர்க்கே. 1

2958
ஒழிந்தேன் பிறவி உறவென்னும்
பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும்ஒன்
றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும்
வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்
டேனே. 2

2959
ஆலைக் கரும்பும் அமுதும்அக்
காரமும்
சோலைத் தண்ணீரும்
உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் அன்ன வடிவுசெய்
வாளொரு

கோலப்பெண் ணாட்குக் குறை
யொன்றும் இல்லையே. 3

2960
ஆராலும் என்னை அமட்டஒண்
ணாதிதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை
புகுந்தனன்
சீராடி அங்கே திரிவதால் லால் இனி
யார்படுஞ் சாரா அறிவறிந் தேனே. 4

2961
பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர்
பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லும்
நிலையை
அரிந்தேன் வினையை அயில்மன
வாளால்

முரிந்தேன் புரத்தினை முந்துகின்
றேனே. 5

2962
ஒன்றுகண் டீர்உல குக்கொரு
தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குஉயி ராவது
நன்றுகண் டீர்இனி நமசிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.
6

2963
சந்திரன் பாம்பொடும் சூடும்
சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக்கு
ஆனவன்
அந்தமும் ஆதியும் இல்லா
அரும்பொருள்

சிந்தையின் மேவித் தியக்கு அறுத்
தானே. 7

2964
பண்டுஎங்குள் ஈசன் நெடுமால்
பிரமனைக்
கண்டுஅங்கு இருக்கும் கருத்தறி
வாரில்லை
விண்டு அங்கே தோன்றி வெறுமனம்
ஆயிடில்
துண்டு அங்கு இருந்ததோர் தூறுஅது
வாமே. 8

2965
அன்னையும் அத்தனும் அன்புற்றது
அல்லது
அன்னையும் அத்தனும் ஆரறி
வார்என்னை

அன்னையும் அத்தனும் யானும்
உடனிருந்து
அன்னையும் அத்தனை யான்புரிந்
தேனே. 9

2966
கொண்ட சுழியும் குலவரை உச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும்
ஆதியும்
எண்டிசை யோரும்வந்து என்கைத்
தலத்துளே
உண்டனர் நானினி உய்ந்தொழிந்
தேனே. 10

2967
தானே திசையொடு தேவருமாய்
நிற்கும்
தானே வடவரை ஆதியுமாய நிற்கும்

தானே உடலுயிர் தத்துவமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனும் ஆமே.
11

2968
நமன்வரின் ஞானவாள் கொண்டே
எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது
திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே
யறுத்தேன்
தவம்வரும் சிந்தைத் தான்எதிராரே.
12

2969
சித்தம் சிவமாய் மலமூன்றும்
செற்றவர்
சுத்தச் சிவமாவர் தோயார் மலபந்தம்

சுத்தும் சிலகும் கலகமும் கைகாணார்
சத்தம் பரவிந்து தானாம்என்று
எண்ணியே. 13

2970
நினைப்பும் மறப்பும் இலாதவர்
நெஞ்சம்
வினைப்பற்று அறுக்கும் விமலன்
இருக்கும்
வினைப்பற்று அறுக்கும் விமலனைத்
தேடி
நினைக்கப் பெறில்அவன் நீளியன்
ஆமே. 14

2971
சிவபெரு மான்என்று நான்அழைத்து
ஏத்தத்
தவப்பெரு மான்என்று தான்வந்து

நின்றான்
அவபெரு மான்என்னை யாளுடை
நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின்
றேனே. 15

2972
பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி
மற்றொன்றும் வேண்டேன்
அணிந்துநின் றேன்உடல் ஆதிப்
பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண்
டேனே. 16

2973
என்நெஞ்சம் ஈசன் இணையடி தாம்
சேர்ந்து

முன்னம்செய்து ஏத்த முழுதும்
பிறப்பறும்
தன்நெஞ்சம் இல்லாத் தலைவன்
தலைவிதி
பின்னம்செய்து என்னைப்
பிணக்கறுத் தானே. 17

2974
பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத்து
எண்ணும்
கணக்கறுத் தாண்டவன் காண்நந்தி
என்னைப்
பிணக்கறுத்து என்னுடன் முன்வந்த
துன்பம்
வணக்கலுற் றேன்சிவன் வந்தது
தானே. 18

2975

சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம்
அறுத்திட்டு
அவன்எந்தை ஆண்டருள் ஆதிப்
பெருமான்
அவன்வந்தென் னுள்ளே அகப்பட்ட
வாறே. 19

2976
கரும்பும் தேனும் கலந்ததோர்
காயத்தில்
அரும்பும் கந்தமும் ஆகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக்
கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும்
புளித்ததே. 20

2977

உள்ள சரியாதி ஒட்டியே
மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த
வளம்பாடிச்
செய்வன எல்லாம் சிவமாகக்
காண்டலால்
கைவளம் இன்றிக் கருக்கடந் தேனே.
21

2978
மீண்டார் கமலத்துள் அங்கி
மிகச்சென்று
தூண்டா விளக்கித் தகளிசெய்
சேர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவன சூடாமணி
மாண்டான் ஒருவன்கை வந்தது
தானே. 22

2979
ஆறே அருவி அகங்குளம்
ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலை கொம்பனை
யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள்
தானே. 23

2980
அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை
ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன்
தானே. 24

2981

மனம்வி ரிந்து குவிந்தது மாதவம்
மனம்வி ரிந்து குவிந்தது வாயு
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்துரை மாண்டது
முத்தியே. 25

## 21 தோத்திரம்

2982
மாயனை நாடி மனநெடுந் தேரெறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள்
செல்வனைக்
காயம்மின் நாட்டிடைக் கண்டுகொண்
டேனே. 1

2983
மன்னு மலைபோல் மதவா

ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவர் ஆரெனில்
முன்னியல் கால முதல்வனார் நாமத்தைப்
பன்னினர் என்றே பாடறி வீரே. 2

2984
முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணாது அரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரே. 3

2985

புகுந்துநின் றான்எங்கள் புண்ணிய
மூர்த்தி
புகுந்துநின் றான்எங்கள் போதறி
வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்கள்
நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின்
றேனே. 4

2986

பூதக்கண் ணாடியில் புகுந்திலன்
போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே
வெளிப்படு
நீதிக்கண் ணாடி நினைவார்
மனத்துளன்
கீதக்கண் ணாடியில் கேட்டுநின்
றேனே. 5

2987
நாமம் ஓர் ஆயிரம் ஓதுமின் நாதனை
ஏமம் ஓர் ஆயிரத் துள்ளே
இசைவீர்கள்
ஓமம்ஓர் ஆயிரம் ஓதவல் லார்அவர்
காமம் ஆயிரம் கண்டொழிந் தாரே. 6

2988
போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகழ்
ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன்
சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ
யோகத்தைப்
போற்றுகின் றேன்எம் பிரானென்று
நானே. 7

2989
நானா விதஞ்செய்து நாடுமின்
நந்தியை
ஊனார் கமலத்தின் ஊடுசென்று
அப்புறம்
வானோர் உலகம் வழிபட மீண்டபின்
தேனார உண்டு தெவிட்டலும் ஆமே.
8

2990
வந்துநின் றான்அடி யார்கட்கு
அரும்பொருள்
இந்திரன் ஆதி இமையவர்
வேண்டினும்
சுந்தர மாதர் துழனியொன்று அல்லது
அந்தர வானத்தின் அப்புறம் ஆமே.
9

2991
மண்ணிற் கலங்கிய நீர்போல்
மனிதர்கள்
எண்ணிற் கலங்கி இறைவன்
இவன்என்னார்
உண்ணிற் குளத்தின் முகந்தொரு
பால்வைத்துத்
தெண்ணீர்ப் படுத்த சிவன்அவன்
ஆமே. 10

2992
மெய்த்தவத் தானை விரும்பும்
ஒருவர்க்குக்
கைத்தலம் சேர்தரு நெல்லிக்
கனியொக்கும்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற
தேவர்கள்
அத்தனை நாடி அமைந் தொழிந்

தேனே. 11

2993
அமைந்தொழிந் தேன்அள வில்புகழ்
ஞானம்
சமைந் தொழிந் தேன்தடு மாற்றம்ஒன்
றில்லை
புகைந் தெழும் பூதலம் புண்ணியன்
நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலும்
ஆமே. 12

2994
வள்ளல் தலைவனை வானநன்
னாடனை
வெள்ளப் புனற்சடை
வேதமுதல்வனைக்
கள்ளப் பெருமக்கள்

காண்பர்கொலோஎன்று
உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருந்து
ஆளுமே. 13

2995
ஆளும் மலர்ப்பதம் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள்
நின்றவர்
கோளும் வினையும் அறுக்கும்
குரிசிலின்
வாளும் மனத்தொடும் வைத்தொழிந்
தேனே. 14

2996
விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய
லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமும் ஆகும்

வருந்தி அவனடி வாழ்த்தவல்
லார்க்கே. 15

2997
வானகம் ஊடறுத் தான்இவ்
வுலகினில்
தானகம் இல்லாத் தனியாகும்
போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந்து
உள்ளுறும்
பானகச் சோதியைப் பற்றிநின்
றேனே. 16

2998
விதியது மேலை அமரர் உறையும்
பதியது பாய்புனல் கங்கையும்
உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு

விக்கும்
பதியது வவ்விட்டது அந்தமும்
ஆமே. 17

2999
மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதுஅனங்
கானது கூவிள மாலை கமழ்சடை
ஆனது செய்யும்என் ஆருயிர் தானே.
18

3000
சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட
கண்டனை
ஏழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
யாழுஞ் சுனையும் அடவியும்
அங்குளன்
வாழும் எழுந்தைந்து மன்னனும்

ஆமே. 19

3001
உலகமது ஒத்துமண் ஒத்ததஉயர்
காற்றை
அலர்கதிர் அங்கிஒத்து ஆதிப்
பிரானும்
நிலவிய மாமுகில் நீர்ஒத்து
மீண்டுஅச்
செலவுஒத்து அமர்திகைத் தேவர் பி
ரானே. 20

3002
பரிசறிந்து அங்குளன் அங்கி
அருக்கன்
பரிசறிந்து அங்குளன் மாருதத்து
ஈசன்
பரிசறிந்து அங்குளன் மாமதி ஞானப்

பரிசறிந்து அந்நிலம் பாரிக்கும்
ஆறே. 21

2903
அந்தம் கடந்தும் அதுஅது
வாய்நிற்கும்
பந்த உலகினில் கீழோர் பெரும்
பொருள்
தந்த உலகெங்கும் தானே பாராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது வாமே.
22

2904
முத்தண்ண ஈரண்ட மேமுடி
ஆயினும்
அத்தன் உருவம் உலகுஏ
ழெனப்படும்
அத்தனின் பாதாளம் அளவுள்ள

சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துஉண ராரே.
23

2905
ஆதிப் பிரான்நம் பிரான்அவ்
அகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றுஒளி
யாய்நிற்கும்
ஆதிப் பிரான்அண்டத்து அப்புறம்
கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகிநின் றானே.
24

3006
அண்டம் கடந்துஉயர்ந்து ஓங்கும்
பெருமையன்
பிண்டம் கடந்த பிறவிச் சிறுமையன்

தொண்டர் நடந்த கனைகழல் காண்டொறும்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கிநின் றானே. 25

3007
உலவுசெய் நோக்கம் பெருங்கடல் சூழ
நிலம்முழுது எல்லாம் நிறைந்தனன் ஈசன்
பலம்முழுது எல்லாம் படைத்தனன் முன்னே
புலம்முழு பொன்னிற மாகிநின் றானே. 26

3008
பராபர னாகிப் பல்லூழிகள் தோறும்
பராபர னாய்இவ் அகலிடம் தாங்கித்

தராபர னாய்நின்ற தன்மை யுணரார்
நிராபர னாகி நிறைந்துநின் றானே.
27

3009
போற்றும் பெருந்தெய்வம் தானே
பிறரில்லை
ஊற்றமும் ஓசையும் ஓசை
ஒடுக்கமும்
வேற்றுடல் தானென்றும் அதுபெருந்
தெய்வமாம்
காற்றது ஈசன் கலந்து நின்றானே. 28

3010
திகையனைத் தும்சிவ னேஅவ
னாகின்
மிகையனைத் தும்சொல்ல வேண்டா
மனிதரே

புகையனைத் தும்புறம் அங்கியிற்
கூடு
முகையனைத் தும்எங்கள் ஆதிப்
பிரானே. 29

3011
அகன்றான் அகலிடம் ஏழும்ஒன்றாகி
இவன்தான் எனநின்று எளயனும்
அல்லன்
சிவன்தான் பலபல சீவனு மாகி
நவின்றான் உலகுறு நம்பனும் ஆமே.
30

3012
கலையொரு மூன்றும் கடந்தப்பால்
நின்ற
தலைவனை நாடுமின் தத்துவ
நாதன்

விலையில்லை விண்ணவ ரோடும்
உரைப்ப
உரையில்லை உள்ளுறும் உள்ளவன்
தானே. 31

3013
படிகால் பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியான் குறுமைசெய் நேசம்
அறுத்துச்
செடியார் தவத்தினில் செய்தொழில்
நீக்கி
அடியேனை உய்யவைத்து
அன்புகொண் டானே. 32

3014
ஈசனென்று எட்டுத் திசையும்
இயங்கின
ஓசையில் நின்றெழு சத்தம் உலப்பிலி

தேசமொன்று ஆங்கே
செழுங்கண்டம் ஒன்பதும்
வாச மலர்போல் மருவி நின் றானே.
33

3015
இல்லனும் அல்லன் உளன் அல்லன்
எம்இறை
நல்லது நெஞ்சம் பிளந்திடும்
காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன்
தூய்மணி
சொல்லரும் சோதி தொடர்ந்துநின்
றானே. 34

3016
உள்ளத் தொடுங்கும் புறத்துளும்
நானெனும்

கள்ளத் தலைவன் கமழ்சடை
நந்தியும்
வள்ளற்பெருமை வழக்கஞ்செய்
வார்கள்தம்
அள்ளற் கடலை அறுத்துநின் றானே.
35

3017
மாறெதிர் வானவர் தானவர்
நாடொறும்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்
ஊறுவர் உள்ளத்து அகத்தும்
புறத்துளும்
வேறுசெய்து ஆங்கே விளக்கொளி
யாமே. 36

3018
விண்ணிலும் வந்த வெளியிலன்

மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன்
காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன்
பான்மையன்
எண்ணில் ஆ னந்தமும் எங்கள்
பிரானே. 37

3219
உத்தமன் எங்கும் உகக்கும்
பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர்
ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந்தறி யாரே. 38

3020
நிறம்பல எவ்வண்ணம்

அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்வண்ணம்
அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம்
அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே.
38

3021
இங்குநின் றான்அங்கு நின்றனன்
எங்குளன்
பொங்கிநின் றான்புவ னாபதி
புண்ணியன்
கங்குல்நின் றான்கதிர் மாமதி ஞாயிறு
எங்குநின் றான்மழை போல்இறை
தானே. 40

3022

உணர்வது வாயுவே உத்தம மாயும்
உணர்வது நுண்ணறிவு எம்பெரு
மானைப்
புணர்வது வாயும் புல்லிய தாயும்
உணர்வுடல் அண்டமும் ஆகிநின்
றானே. 41

3023
தன்வலி யால்உல கேழும் தரித்தவன்
தன்வலி யாலே அணுவினும்
தான்நொய்யன்
தன்வலி யால்மலை எட்டினும்
தான்சாரான்
தன்வலி யாலே தடம்கட லாமே. 42

3024
ஏனோர் பெருமையன் ஆகிலும் எம்இறை

ஊனே சிறுமையும் உட்கலந்து
அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன்
மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.
43

3025
பிண்டாலம் வித்தில் எழுந்த
பெருமுளைக்
குண்டாலம் காயத்துக் குதிரை
பழுத்தது
உண்டனர் உண்டார் உணர்விலா
மூடர்கள்
பிண்டத்துஉட் பட்டுப்
பிணங்குகின்றார்களே. 44

## 22. சர்வ வியாபி

3026

ஏயும் சிவபோகம் ஈதன்றி ஓரொளி
ஆயும் அறிவையும் மாயா
உபாதியால்
ஏய பரிய புரியும் தனதுஎய்தும்
சாயும் தனது வியாபகம் தானே. 1

3027

நான்அறிந்து அப்பொருள் நாடஇடம்
இல்லை
நான்அறிந்து அங்கே வழியுற
விம்மிடும்
ஊன்அறிந்து உள்ளே உயிர்க்கின்ற
ஒண்சுடர்
தான்அறிந்து அங்கும் தலைப்பட
லாமே 2

3028
கடலிடை வாழ்கின்ற கௌவை
உலகத்து
உடலிடை வாழ்வுகொண்டு
உள்ளொளி நாடி
உடலிடை வைகின்ற உள்ளுறு
தேவனைக்
கடலின் மலிதிரைக் காணலும் ஆமே.
3

3029
பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி
யாகித்
தெரிந்துட லாய் நிற்கும் தேவர்
பிரானும்
இருஞ்சுடர் விட்டிட்டு இகலிடம்
எல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்கோரை

யாமே. 4

3030
உறுதியின் உள்வந்த உள்வினைப்
பட்டு
இறுதியின் வீழ்ந்தார் இரணமது
ஆகும்
சிறுதியின் உள்ளொளி திப்பிய
மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சுட
ராமே. 5

3031
பற்றி னுள்ளே பரமாய பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற
மூன்றொளி
நெற்றியின் உள்ளே நினைவாய்
நிலைதரு

மற்றவ னாய்னி ன்ற மாதவன் தானே.
6

3032
தேவனும் ஆகும் திசைதிசை
பத்துளும்
ஏவனும் ஆம்விரி நீருலகு ஏழையும்
ஆவனு மாம் அமர்ந்து எங்கும்
உலகினும்
நாவனும் ஆகி நவிற்றுகின் றானே. 7

3033
நோக்கும் கருடன் நொடிஏழ்
உலகையும்
காக்கும் அவனித் தலைவனும்
அங்குள
நீக்கும் வினைஎன் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரல் லானே. 8

3034

செழுஞ்சடை யன் செம்பொ
னேயொக்கும் மேனி
ஒழிந்தன னாயும் ஒருங்குடன் கூடும்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்திலகு ஏழுலகு ஒத்துநின்
றானே. 9

3035

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணரும் அவன்தன்னை எண்ணலும்
ஆகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின்
றானே. 10

3036

புலமையின் நாற்றமில் புண்ணியன்
எந்தை
நலமையின் ஞான வழக்கமும் ஆகும்
விலமையில் வைத்துள் வேதியர்
கூறும்
பலமையில் எங்கும் பரந்துநின்
றானே. 11

3037
விண்ணவ னாய்உலகு ஏழுக்கு
மேலுளன்
மண்ணவ னாய்வலம் சூழ்கடல்
ஏழுக்கும்
தண்ணவன் ஆயது தன்மையின்
நிற்பதோர்
கண்ணவ னாகிக் கலந்துநின் றானே.
12

3038

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி
நின்றனன் தான்நிலம் கீழொடு மேலென
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாயே. 13

3039

புவனா பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனும் ஆகும்
அவனே இறையென மாலுற்ற வாறே. 14

3040

உண்ணின்று ஒளிரும் உலவாப்
பிராணனும்
விண்ணின்று இயங்கும் விரிகதிர்ச்
செல்வனும்
மண்ணின்று இயங்கும் வாயுவு மாய்
நிற்கும்
கண்ணின்று இயங்கும் கருத்தவன்
தானே. 15

3041
எண்ணும் எழுத்தும் இனஞ்செயல்
அவ்வழிப்
பண்ணும் திறனும் படைத்த
பரமனைக்
கண்ணிற் கவரும் கருத்தில் அதுஇது
உண்ணின்று உருக்கியோர் ஆயமும்
ஆமே. 16

3042
இருக்கின்ற எண்டிசை அண்டம்பா
தாளம்
உருக்கொடு தன்னடு
ஒங்கஇவ்வண்ணம்
கருக்கொடு எங்கும் கலந்திருந்
தானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை
யானே. 17

3043
பலவுடன் சென்றஅப் பார்முழுது
ஈசன்
செலவுஅறி வார்இல்லை சேயன்
அணியன்
அலைவிலன் சங்கரன் ஆதிஎம் ஆதி
பலவில தாய் நிற்கும் பான்மைவல்
லானே. 18

3044
அதுஅறி வானவன் ஆதிப் புராணன்
எதுஅறி யாவகை நின்றவன் ஈசன்
பொதுஅது வான புவனங்கள் எட்டும்
இதுஅறி வானநந்தி எங்கள் பிரானே.
19

3045
நீரும் நிலனும் விசும்புஅங்கி
மாருதம்
தூரும் உடம்புறு சோதியு மாய் உளன்
பேரும் பராபரன் பிஞ்ஞுகன்
எம்இறை
ஊரும் சகலன் உலப்பிலி தானே. 20

3046
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்

மூலன் உரைசெய்த முன்னூறு
மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது
உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும்
ஒன்றாமே. 21

## 23. வாழ்த்து

3047
வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத்
தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத்
தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான்
பாதமே. 1.

ஒன்பதாம் தந்திரம் முற்றிற்று.
திருமூலர் திருமந்திரம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்